IHP
INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## ஊடக அறிவிப்பு


**திகதி வரை தடையாணை**
திகதி : 11 September 2024
நேரம் : 07:00 PM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info ‘at’ ihp.lk
**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**
மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya

# ஆகஸ்ட் மாத வாக்காளர் தீர்மானத்தில் அ. கு. திசாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச, வயது வந்தவர்கள் அனைவருக்கும் மத்தியில் முன்னிலை வகித்தனர், ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நோக்கி மாற்றம் தொடர்கின்றது


*IHP MRP ஜனாதிபதித் தேர்தல் புதுப்பிப்பு – ஆகஸ்ட் 2024*

செப்டம்பர் மாத ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, IHP இன் இலங்கை கருத்துக் கண்காணிப்பு ஆய்வின் (SLOTS) ஆகஸ்ட் 2024 ற்கான ஜனாதிபதித் தேர்தல் வாக்காளர் தீர்மானத்தின் MRP தற்காலிக மதிப்பீடுகள், 18 வயதிற்கு மேற்பட்ட அனைவர்களினது விருப்பத்தேர்வில் என்.பி .பி ./ஜே.வி.பி . தலைவர் அ. கு. திசாநாயக்க மற்றும் எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் முன்னிலை வகிப்பதனை காட்டுகின்றது. நான்கு முதன்மைக் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களில் எவருமே பெரும்பான்மையான வயது வந்த வாக்காளர்களின் ஆதரவினை பெற்றுக்கொள்ளவில்லை. என்.பி .பி ./ ஜே.வி.பி தலைவர் அ. கு. திசாநாயக்க அனைத்து வயது வந்தவர்கள் மத்தியிலும் 36% பெற்று முன்னிலை வகித்தார். இதனைத் தொடர்ந்து எஸ்.ஜே.பி தலைவர் சஜித் பிரேமதாச 32%, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 28%, நாமல் ராஜபக்ச 3% எனப் பெற்றிருந்தனர். இந்த மதிப்பீடுகள் 3-7% பிழை விளிம்புடன் தொடர்புடையவையாகும்.




ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவு, 2024 மார்ச் முதல் ஆகஸ்ட்டில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இதேவேளை அ. கு. திசாநாயக்க, சஜித் பிரேமதாச மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கான ஆதரவு சிறிய அளவில் குறைந்துள்ளது.

IHPஇன் நிறைவேற்றுப்பணிப்பாளர், மருத்துவர். ரவி ரன்னன்-எலிய, இந்த நெருக்கமான போட்டி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "எங்கள் ஆகஸ்ட் மாதக் கருத்துக்கணிப்பு, முதல் கணக்கெடுப்பில் எந்த வேட்பாளரும் பாதியளவு வாக்குகளை நெருங்க முடியாத இறுக்கமான போட்டியைக் குறிக்கின்றது. இது, பெரும்பான்மையான வாக்காளர்களின் ஆதரவைப் பெற எந்த வேட்பாளரும் வெற்றிபெறவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது. அதேசமயம், 2024 தேர்தல் இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பத்தேர்வுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் முதல் ஜனாதிபதி வாக்கெடுப்பாக இருக்க அதிக வாய்ப்புள்ளது. ஒவ்வொரு வாக்கும் கணக்கிடப்படுவதை உறுதிசெய்வதற்கு அவர்களின் விருப்புத்தேர்வுகளை பயன்படுத்துவது பற்றி வாக்காளர்களுக்கு அறிவுறுத்துவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்துமாறு சிவில் சமூகத்தையும் தேர்தல்கள் ஆணைக்குழுவையும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்." என்று அவர் குறிப்பிட்டார்.





ஆகஸ்ட் மாதத்திற்கான MRP மாதிரி மதிப்பீடுகளின் பகுப்பாய்வு, ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஆதரவுத் தளத்தில் உள்ள வேறுபாடுகளை வெளிப்படுத்துகின்றது. பெரும்பான்மையான இளைஞர்கள் (53%) மற்றும் சிங்கள வாக்காளர்களின் (42%) ஆதரவுடன் அ. கு. திசாநாயக்கவுக்கான ஆதரவு, குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், வலுவாக இருந்தது. மிகவும் வசதிபடைத்த மூன்றில் ஒரு பங்கு வாக்காளர்கள் (38%) அ. கு. திசாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையும் ஆதரித்தனர். இதற்கு மாறாக, சஜித் பிரேமதாச ஏழையான மூன்றில் ஒரு பங்கு வாக்காளர்களிடையே முன்னிலை வகித்தார் (40%).

இலங்கைத் தமிழர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் (55%) மற்றும் பெருந்தோட்ட/ இந்தியத் தமிழர்கள் (53%) சஜித் பிரேமதாசவை ஆதரித்தனர். அதே சமயம் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் (71%) அவருக்கு ஆதரவாக இருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவு வயதுக்கு ஏற்ப அதிகரித்து, 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் 43% ஐ எட்டியது.

**மக்கள் தொகை பண்புகளின் படி ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம், ஆகஸ்ட் 2024 (வயது வந்தவர்கள் %)**

இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?





**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**

அக்டோ. 01 2021-செப். 02 2024 வரை நடத்தப்பட்ட 19,721 பேட்டிகளின் அடிப்படையில் MRP என்னும் ஒரு புள்ளியியல் மாதிரியிலிருந்து மதிப்பீடுகள் பெறப்படுகின்றன, மதிப்பீடுகள் ஆகஸ்ட் மாத நடுப்பகுதி வரை.

அ. கு. திசாநாயக்க வடக்கு மற்றும் கிழக்கைத் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களில் முன்னிலை வகித்தார். அங்கு அவர் சஜித் பிரேமதாச மற்றும் ரணில் விக்கிரமசிங்கவை விட பின்தங்கி மூன்றாவது இடத்தில் வகித்தார்.


**மாகாணம் படி ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம்**
இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
அக்டோ. 01 2021-செப். 02 2024 வரை நடத்தப்பட்ட 19,721 பேட்டிகளின் அடிப்படையில் MRP என்னும் ஒரு புள்ளியியல் மாதிரியிலிருந்து மதிப்பீடுகள் பெறப்படுகின்றன, மதிப்பீடுகள் ஆகஸ்ட் மாத நடுப்பகுதி வரை.

அ. கு. திசாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் 2019 இல் கோட்டாபய ராஜபக்சவிற்கு வாக்களித்தவர்களிடமிருந்து பெரும்பாலான ஆதரவை பெற்றனர். இவர்களில் எட்டில் ஒருவர் மட்டுமே சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளித்தனர்.

**அரகலய மற்றும் வரியவர்-வசதியானவர் இடைவெளி பற்றிய எண்ணத்தின் படி ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம், ஆகஸ்ட் 2024**
இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
அக்டோ. 01 2021-செப். 02 2024 வரை நடத்தப்பட்ட 19,721 பேட்டிகளின் அடிப்படையில் MRP என்னும் ஒரு புள்ளியியல் மாதிரியிலிருந்து மதிப்பீடுகள் பெறப்படுகின்றன, மதிப்பீடுகள் ஆகஸ்ட் மாத நடுப்பகுதி வரை.


மக்கள் போராட்டத்தைப்(அரகலய) பற்றிய பொதுக் கருத்தின் அடிப்படையில் வாக்காளர் தீர்மானத்தின் மேலதிக பகுப்பாய்வு, ஆகஸ்ட் மாதத்தில் மக்கள் போராட்டத்தைப் பற்றிய சாதகமற்ற பார்வையைக் கொண்டவர்களை விட சாதகமான பார்வையைக் கொண்ட வயது வந்தவர்கள் (27% உடன் ஒப்பிடுகையில் 37%) அ. கு. திசாநாயக்கவை ஆதரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதைக் காட்டுகின்றது. இதற்கு மாறாக, ரணில் விக்ரமசிங்க மற்றும்

நாமல் ராஜபக்ஷ மக்கள் போராட்டத்தைப் பற்றி எதிர்மறையான பார்வை கொண்டவர்களிடையே சிறப்பாகச் செயல்பட்டனர். அதே சமயம் சஜித் பிரேமதாச இரு குழுக்களிலும் சமமாக செயல்பட்டார்.

நாட்டில் ஏழை-பணக்காரர் மத்தியிலான இடைவெளி நல்லதா கெட்டதா என்பது பற்றிய வாக்காளர்களின் கருத்துக்களுடன் சார்ந்த, ஒப்பிடக்கூடிய ஆனால் பலவீனமான தொடர்பு காணப்பட்டது. இவ் இடைவெளிக்கு விருப்பம் கொண்டவர்களைவிட இவ் இடைவெளி கெட்டது என்று கருதியவர்களுக்கு மத்தியில் அ. கு. திஸாநாயக்கவின் மதிப்பீடுகள் 3 புள்ளிகள் உயர்வாக இருந்த அதே சமயத்தில், அவர்கள் மத்தியில் ரணில் விக்ரமசிங்கவின் மதிப்பீடுகள் 4 புள்ளிகளால் குறைந்தன.

மருத்துவர். ரன்னன்-எலிய கருத்துத் தெரிவிக்கையில், "பெரும்பான்மையான இலங்கையர்கள் மக்கள் போராட்டத்தை சாதகமான எண்ணத்துடனும், ஏழை-பணக்காரர்களிற்கு இடையிலான இடைவெளி இலங்கையில் அதிகரித்து வருவதாகவும், இது மோசமானது என்றும் நினைக்கிறார்கள் என்று எங்கள் கருத்துக்கணிப்பு சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் முன்னணி வேட்பாளர்களில் எவரும் இவ் உணர்வுகளை வெற்றி தரும் செய்தியாக மாற்றி திறம்பட பயன்படுத்த முடியாமல் இருப்பது ஆச்சரியமான விடயமாகும்." என்று கூறினார்.

**2019 ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு வரலாற்றின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம், ஆகஸ்ட் 2024 (வயது வந்தவர்கள் %)**
இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
அக்டோ. 01 2021-செப். 02 2024 வரை நடத்தப்பட்ட 19,721 பேட்டிகளின் அடிப்படையில் MRP என்னும் ஒரு புள்ளியியல் மாதிரியிலிருந்து மதிப்பீடுகள் பெறப்படுகின்றன, மதிப்பீடுகள் ஆகஸ்ட் மாத நடுப்பகுதி வரை.

இந்த மதிப்பீடுகள் IHP SLOTS மல்டிலெவல் ரிங்ரெஷன் மற்றும் போஸ்ட்டிராபிகேஷன் (Multilevel Regression and Poststratification - MRP)மாதிரியைப் பயன்படுத்துகின்றன (01/2024 திருத்தம்). இந்த புதுப்பிப்பு அனைத்து வயது வந்தவர்களுக்குமானது மற்றும் ஆகஸ்ட் 2024 இல் நடத்தப்பட்ட 1,153 பேட்டிகள் உட்பட 1 அக்டோ. 2021 முதல் 2 செப்டெ. 2024 வரை நடத்தப்பட்ட 19,721 பேட்டிகளின் தரவைப் பயன்படுத்துகின்றது. மாதிரியின் நிச்சயமற்ற தன்மையைக் கைப்பற்ற நூறு பூட்ஸ்ரெப்கள் (bootstrap) இயக்கப்பட்டன. இதில் ஆகஸ்ட் மாதத்திற்கான பிழை விளிம்புகள் 1–7% என மதிப்பிடப்பட்டன. ஜனாதிபதித் தேர்தலுக்கு இட்டுச் செல்லும் வாரங்களில் சிறந்த மதிப்பீடுகளை வழங்குவதற்காக IHP அதனது பேட்டி எண்களை அதிகரித்துள்ளது.

IHPன் SLOTS MRP முறையானது, பதிலளிப்பவர்களின் பல்வேறு வகையான குணாதிசயங்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் – இங்கு, "இன்று

ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?” என்னும் கருத்துக்கும் – இடையேயான தொடர்பை பல அடுக்கு(multilevel model) புள்ளியியல் மாதிரியின் மூலம் முதலில் மதிப்பிடுகிறது. இந்த மாதிரி மாதங்களுக்கு இடையே ஏற்படும் மாற்றங்களையும் சீராக்கும். அதன் பின் தேசிய மக்கள்தொகைக்கு ஏற்ப அளவீடு செய்யப்பட்ட ஒரு பாரிய தரவு கோப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு கட்சிகளுக்கு அவர்கள் வாக்களிக்ககூடிய நிகழ்தகவினைப்பற்றி பல அடுக்கு மாதிரி(multilevel model) கூறுவதை வைத்து(‘post-stratification’), அக். 2021 முதல் ஒவ்வொரு மாதமும் வாக்காளர் தீர்மானத்தை கணிக்கிறது. மாதிரியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை பிரதிபலிக்கவும், பிழை விளிம்புகளைப் பெறவும் பல அடுக்கு மாதிரி(multilevel model) 100 முறை மதிப்பிடப்பட்டது. சென்ற வெளியீட்டிற்குப்பின் மேலும் தரவுகள் சேகரிக்கப்பட்டதால் முந்தைய மாதங்களுக்கான வாக்காளர் தீர்மானம் இந்த புதுபிப்பில் மாறியுள்ளன. இந்த மாற்றங்கள் பிழை விளிம்பிற்குள் உள்ளன.

### முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்


Institute for Health Policy, April 2023, “AK Dissanayake (48%) leads Sajith Premadasa (37%) in Presidential Election voter preferences. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update March 2023”.
*Available at: https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202309.pdf*

Institute for Health Policy, March 2024, “AK Dissanayake (53%) continues to lead Sajith Premadasa (34%) in Presidential Election voting intent in February 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update February 2024”.
*Available at:*https://ihp.lk/press-releases/ak-dissanayake-53-continues-lead-sajith-premadasa-34-presidential-election-voting

Institute for Health Policy, April 2024, “Sajith Premadasa (41%) closes gap with AK Dissanayake (44%) in Presidential Election voting intent in March 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update March 2024”.
*Available at:*https://ihp.lk/press-releases/sajith-premadasa-41-closes-gap-ak-dissanayake-44-presidential-election-voting-intent

Institute for Health Policy, May 2024, “Sajith Premadasa and AK Dissanayake tied with 39% support in Presidential Election voting intent in April 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update April 2024”.
*Available at:*https://ihp.lk/press-releases/sajith-premadasa-and-ak-dissanayake-tied-39-support-presidential-election-voting

Institute for Health Policy, June 2024, “AK Dissanayake (39%) and Sajith Premadasa (38%) continue to bolster support in Presidential Election voting intent in May 2024. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update May 2024”.
*Available at:*https://ihp.lk/press-releases/ak-dissanayake-39-and-sajith-premadasa-38-continue-bolster-support-presidential

Institute for Health Policy, July 2024, “Sajith Premadasa (43%) leads as Presidential Election kicks off in June 2024, but within margin of error. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update June 2024”.

Available at:[https://ihp.lk/press-releases/sajith-premadasa-43-leads-presidential-election-kicks-june-2024-within-margin-error](https://ihp.lk/press-releases/sajith-premadasa-43-leads-presidential-election-kicks-june-2024-within-margin-error)

Institute for Health Policy, August 2024, “AK Dissanayake and Sajith Premadasa lead neck and neck in July voting intent, but support for Pres. Ranil Wickremesinghe surges. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update July 2024”.
*Available at:*[https://ihp.lk/press-releases/ak-dissanayake-and-sajith-premadasa-lead-neck-and-neck-july-voting-intent-support](https://ihp.lk/press-releases/ak-dissanayake-and-sajith-premadasa-lead-neck-and-neck-july-voting-intent-support)

**IHP பற்றி**

இந்த கருத்துக்கணிப்பை மேற்கொள்ளவும் வடிவமைக்ககவும் IHP மட்டுமே பொறுப்பு, மேலும் இதற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் மூன்று தசாப்தங்களாக பல கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளார்.

**முறைமை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை மல்டிலெவெல் ரிக்ரெஷென் மற்றும் போஸ்ட் ஸ்ற்றாடிபிகேஷன் (Multilevel Regression and Post-Stratification) (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை மல்டிபல் இம்ப்யூடேஷன்(multiple imputation) என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

ஆகஸ்ட் 2024க்கான MRP மதிப்பீடுகள் ஆகஸ்ட் 2024 ல் நடத்தப்பட்ட 1,153 நேர்காணல்கள் மற்றும் அக்டோபர் 1 2021- செப்டம்பர் 2 2024 வரை நடத்தப்பட்ட 19,721 ஒட்டுமொத்த நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது. ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாசவிற்கு பிழை விளிம்பு 4.4–6.4% எனவும், மேலும் அ.கு.திஸாநாயக மற்றும் நாமல் ராஜபக்ஷவிற்கு 2.2-2.4% என்றும் மதிப்பிடப்பட்டது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

**நிதியுதவி**

2021 முதல் SLOTS ஆய்வின் களவேலை நிதிவழங்குனர்கள் பலரால் ஆதரிக்கப்பட்டது. இவர்கள் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ பங்கு வகிப்பதில்லை. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஆசியா மன்றம்(The Asia Foundation), ஐரோப்பிய கமிஷன், ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம், தி பவுண்டேஷன் ஓபன் சொசையடி இன்ஸ்டிட்யூட் மற்றும் ஏனையோர் முன்பு நிதி வழங்கியுள்ளவர்களில் அடங்குவார்கள். தற்போதைய கள வேலைகளை வெலக்ஸ் ஸ்டிப்டங் அரக்கட்டளை, நியூ யார்க் பல்கலைக்கழகம் அபு தபி, மற்றும் IHPன் பொது நல ஆய்வு நிதி ஆதரிக்கின்றினர். அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை பிரதிப்பலிப்பன அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.

**பின்குறிப்பு:** கலைச்சொற்கள் சரிபார்த்தப்பின் இந்த மொழிபெயர்ப்பு புதுபிக்கப்படும்